உ

பரமபதி துணை.

திருவள்ளுவநாயனார்

அருளிச்செய்த

சூத்திரம் - 16.

பஞ்சரத்தினத் திருப்புகழ் - 16
அடங்கி இருக்கின்றது.



சென்னை - இட்டா,

பார்த்தசாரதி நாயுடு சன்ஸ்

சக்கரவர்த்தி அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை] 1936. [அணா 2.

உ

கடவுள் துணை.

திருவள்ளுவநாயனா ரருளிச்செய்த

சூத்திரம் - ௰௬

பூரணமாய்நின்றெழுந்த முதலேகாப்பு
புகழ்பெரிய அம்பிகைப்பெண் சித்தர்காப்பு
காரணமாங்கர்ரசாரம் குருவேகாப்பு
கதிரொத்தசுழிமுனையாள் பாதம்காப்பு
வாரணமாம்ரவிமதியும் வழலைகாப்பு
வாக்கானசரஸ்பதியும் பிரமன்பாதம்
ஆரணமாம்லட்சுமிப்பெண் பாதத்தோடு
அறுமுகனுங்கணபதியும் ஆதிகாப்பே. 1

காப்பாகயென்கருத்துக் கிசைந்தமைந்தா
கருத்துள்ளயேலேல சிங்கமேகேள்
வாரப்பாமறைவான முப்புமார்க்கம்
வாரறியசொல்லுமென்றாய் பணிந்துகேட்பாய்
பேரப்பாசித்தரெல்லாம பாடிவைத்த
தென்மகனேயறியவென்றால் நாளோயில்லை
ஆரப்பாயாவருக்கும் அஞ்சிநானே
அறைகிறேன்சிந்தைவந்து அறிந்துகேளே. 2

கேளப்பாஈரடியாய் வேதஞ்சொன்னேன்
கெடியாகயிவ்வுலகோர் பிழைக்கவேண்டி
கோளப்பாபரிபாஷைக் கூறில்லாமல்
கொட்டினேன் ஆயிரத்தி யைந்நூற்றுக்குள்
தாளப்பா அதைக்குறுகி யெண்ணூறுசொன்னேன்
தயவாகவதைக்குறுகி யைந்நூர்சொன்னேன்
மூளப்பாவதைக்குறிக்கி முந்நூர்சொன்னேன்
முக்கியமாயதைக்குறிக்கி நூறுஞ்சொன்னேன், 3

சொன்னேனேயிவைகளிலே விரிவாய்த்தானே
துய்யகுணமுள்ளதிட சித்தர்சிங்கா
பொன்னிலையென்புத்திதனில் மிகுந்தபிள்ளாய்
பூரணமாய்முப்பதுக்குள் கருவையெல்லாம்
பன்னேன்பரிபாஷை பிழையில்லாமல்
பேதாதிபேதங்கள் பிழையில்லாமல்
பின்னேகேள்கோரக்கர் கமலர்பாதம்
பிரித்தல்லோபாடுகிறேன் தமிழாய்த்தானே. 4

தானானவாதத்தின் முப்புகேளு
தலைகீழாய்ப்பாடிவைத்தார் சித்தரெல்லாம்
யேனேதானுலகத்தோர் மழுங்கும்வண்ணம்
யேகமாய்பரிபாஷை யாகச்சொன்னார்
விரிவினைக்குறைத்த வண்மையாக
வஞ்சனைகளில்லாமல் சொல்லக்கேளு
காணுதகாரத்தின் பெருமைதன்னை
கண்காட்சியாகவேதான் காட்டுறேனே. 5

காரானவீரமென்றும் பச்சையென்றுங்
கதிரென்றுங்கன்னியுட நாதமென்றும்
பேரானபிணமென்றும் குருவண்டென்றும்
பேர்பெரியகுப்பக்கல் வழலையென்றும்
வாரானபுளியென்றும் சவ்வாதென்றும்
வகையாகஜுங்கோல வன்னியென்றும்
கூரானகோசமென்றும் குமரியென்றும்
குணமான நீர்மேல்நெருப் பென்றுந்தானே. 6

தானானசிலையென்றும் தாரையென்றும்
தற்பரையாய்சத்திசிவ தாயேயென்றும்
கோனானயானையென்றும் குதிரையென்றும்
கூறுவார்நாமங்கள் பேதாபேதம்
வீராகயிதனலே மாந்தரெல்லாம்
வெவ்வேறாய்செய்தழிந்து விருதாவானர்
மானானகாரமென்றல் மண்தானப்பா
பண்ணிலேமகத்தான மண்தான்பாரே. 7

பாரே நீ தைமாசி மீனமூன்றில்
பனிக்குமே சந்திரனில் விந்துவாலே
சீரே கேள் மண்ணதனிலே ஜலமே பாய்ந்து
சிக்கியதில் ரேசித்து ஜெனிக்குங் காலம்
வாரே தான் றவிபடர்ந்து பூர்க்கும் பாரு
வானவர்கள் மெச்சுகின்ற வழலை மைந்தா
மீராமல் மெறியலிட்டு மூன்றுநாளும்
விடிந்ததொரு நாலானாள் ரவிக்குமுன்னே. 8

ரவிதானும் படுகாமுன் னதனை வாங்கி
நாதாந்தமூர்த்தியரைப் பணிந்தெடுத்து
கவியாதே இதற்குநிகர் வேறுமில்லை
சந்திரனைத் தரித்தசிவ மைந்தனார்க்கு.
புவிமீதில் சொல்லிவிட்டேன் பூரந்தன்னை
புத்தியினால் செய்பாகம் அறிந்துகொண்டு
அழியாத சாரத்தின் னருமைதன்னை
அறைகுறேன் ஏலேலசிங்கமே யறிந்துகொள்ளே.

கொள்ளவே ஆதியிலே யுதித்தநாதம்
குணமான சுத்தசல மிதற்குப்பேறு
விள்ளவே வழலையென்றும் பச்சையென்றும்
வாகான வஸ்துவென்றும் தென்பாலென்றும்
விள்ளுவார் அப்பென்றும் பனங்கள்ளென்றும்
விள்ளவே சாயவேர் சஞ்சீவியென்று
கள்ளான பாறையென்றும் விந்துவென்றும்
கானகத்துச்சாறையென்றும் பாடினாரே. 10

பாடினார் வெண்சாறை கருநெல்லியென்றும்
பதிவான காசாம்வேரென்றுஞ்சொல்வார்
தேடினால் வெளிகளிலும் கிடையாதப்பா
தெள்ளமுதே வுன்மனதி லுண்டுதேறு
வாடாதே அண்டபிண்டம் நிறைந்துநிற்கும்
வகையான பனைமரமென் றதற்குப்பேறு
நாடிப்பாரந்தமர மெங்கும்நிற்கும்
நாடியான்பாலைகொய்து நாட்டம்பாரே. 11

பாரே நீபொதிகைமலை சார்பிலப்பா
பாங்காகதான் குபே ரதற்குமுண்டு
தேரே நீமலையினுச்சி காடுமுண்டு
தெளிந்துனின் றகீழ்வறையும் ரோமக்காடு
கூறே நீஐந்தெழுத்தை தழுவிநிற்கும்
குணமான அகாரமென்று மதற்குப்பேறு
வாரே நீபீஜமென்று மதற்குப்பேறு
வகையான அகாரந்தான் ஐந்தெழுத்துமாமே. 12

ஆமப்பாகாரமுடன் சாரம்சொன்னேன்
அதற்குயிரும் நிலைமூன்று மறியச்சொன்னேன்
காமப்பா அவைகளிட பேரும்சொன்னேன்
கருத்தறியவந்தநிலை சூட்சம்சொன்னேன்
நாமப்பாகனிறப்பெல்லாம் வெளியாய்ச்சொன்னேன்
நான்கண்டபாகமிது வேறுமில்லை
காமப்பால்தனைஒழிந்தோர்க் கெய்துமின்னால்
கண்டுகொள்வும்பெடுக்கக் கருதுவேனே. 13

கருதுவேன்காரமது வொன்றேயாகும்
கனிவானசாரமது காலதாகும்
உறுதியாஞ்சாரத்தி லதைக்கரைத்து
யுறவாக்கியதை நீயும் பதநம்பண்ணு
கூர்க்கேள்மூன்றுநாள் தெளிவிருத்து
கொம்பனையாள்கடைசரக்கு வீரம்பூரம்
தேறேநீபொடித்ததிலே தூளைக்கொட்டி
சீராகமுன்போலத் தெளியவையே. 14

வைத்துமேமூன்றுநாள் தெளிவைவாங்கி
வாகாகஅடுப்பேற்றி தீபமூட்டு
நயத்துமேஜெலமெல்லாங் கண்டபின்பு
நாயகமேபீங்கானில் வார்த்துப்போடு
பக்தியாய்ரவியில்வைக்க வுப்பதாகும்
பாங்காகயதையெடுத்துப் பதனம்பண்ணு
நித்தமுமேதாயேகா ரென்றுசொல்லி
நிலையாககுப்பிதனி லடக்குவாயே. 15

அடைத்ததொரு சிறுகண்ணும் நாகம்வாங்கி
அதையிலுப்பெண்ணையால் சுத்திசெய்து
திடப்படுவேனாகமதை யுருக்கிமைந்தா
திப்பவேவுருக்குமுகம் கிராசம்செய்ய
வடுப்படவேவுப்பெடுத்துக் கொடுத்துப்பாரு
வாதியேநாகசெம் பாகும்பாரு
முடிப்பட்டதைகுருவாய் வைத்துக்கொண்டு
மூவுலகில்சித்து விளையாடுவாயே. 16

ஆடுவாய்செம்பதைத்தான் பத்துக்கொன்று
அடைவாகநீகொடுத்தால் ஈரஞ்சப்பா
மூடரப்பாமுறையறிந்து செய்யமாட்டார்
முட்டாளுக்குறையாதே முழுகிப்போவாய்
தேடாதேதேய்வீதுதான் யேலேலசிங்கா
தெரியவேசொல்லிவிட்டே னுனக்காகமைந்தா
காடெல்லாந்திரிந்தயர்ந் தலையவேண்டாம்
கண்டுகொள்பதினாறும் கணக்காய்முற்றே. 17

திருவள்ளுவநாயனர் அருளிச்செய்த

சூத்திரம் பதினாறு

முற்றிற்று.

திருவள்ளுவநாயனாரருளிச்செய்த

பஞ்சரத்தினத்

திருப்புகழ் - ௰க.

ஆதியந்தமு மேபடைத்தாண்டருள்
சோதியாம்பர னுதனடிதொழும் - தருள்மேவி
நீதியாளனை யாண்டருளன்னையாம்
சாதியென்குல நாரணிபூரணி
போதியென்றுயர் பெற்றதோர்வாலையாம் - நின்பாதம்
மாதுப்பங்கய மாமலர்சூடியாள்
யீதறிந்து யியம்புவேன்பூரணி
யேதுமேதடை யில்லையென் னூலது-யெளியோர்க்காய் 1

எளியனுயிரம் மேலுட னுந்து னூர்
பொழியுமேகம தாகியேகூறினேன் - புவிமீது
கிளியுமெட்டுநூர் மொழியுமைந்து னூர்
விழியுமூன்று நூர் சுழியுமொன்று னூர்
வழியுமெண்பது புகழுமன்பது கழிவுமுப்பது
அழிவிலாத பதினாறுபத்துடன் - அதுமேலாம்
கொழியுமாண்டையே விதியரிந்தவர்க்கழிவிலாபொரு
கருணையாலேயான் மொழியுஞ்செந்தமிழ் [ள்
பொதுவிதாகுமே (ஏலேலம்) 2

யேலம்யேல மெனக்கூவிப்பாடுறேன்
ஜாலஜால ஜெயயோகமறிந்திடார் - சனியாலே
கோலகாலனருள் நீலகண்டப்பொருள்
நீலினீலியெனும் தாயுமோனமருள்
ஆயிஆயியெனு ஆயிசொன்னதிது - அரனாணை
போலிபோலி யெனவூர்கள்சுற்றியே
வேலிவேலிதழை காய்கிழங்குகனி
தாலிதாலியென யாகும்யாகுமென - (இதுமோசம்) 3

மோசமோசமென் றேயுறையாடுவான்
ஆசபாசவினை யானதேயொழித்தோ - நணுகானே
தேசதேசமதி லேதிரிந்தாலென்
நேசனுனசூதர் ரசவாதமோசமாகிக்கண்கெட்டு
வாடுவார் - தெரியாதால்
கோசபீஜமருள் நேசங்கண்டவன்
வாசிவாசிவர் ரேசகத்திலருள்
பூசையற்றுமன நேசமுற்றவன் - (தனவானுய்) 4

தனந்தனமென தேடயென்னுறினில்
நினைவினோர்களே கனகமானதை (காணுரே)
நினைவுமாறிடா தெனதுசீடனே
கவனமதாகவே முப்புமார்க்கமும்
உனதுமீதினி லன்புவைத்துயான் (உரைசெய்வேன்)
கனககாரமது புவியதாகிடும் - தினமதாக
பனிகாலமானதில் நினைவதாகவெடு
கவனமாறிடா - (இதுதானே.) 5

தானேயென்றபொருள் தன்னைத்தானறியும்
மோனமந்திர சாரமுங்கட்டு - மதிலுண்டு
ஏனமாளவுபாகமீரிடா சோனையும்பொருள்
கானங்கூடிடாகாணலாமிது காரமுஞ்சாரமும் - கரைத்
வானவன்னியில் காய்ந்தபின்னது [தேதான்
சீனகும்பியில் பதனமானது
நாணயத்துடன் காத்துமேவிடா - (அடைத்தேதான்) 6

அடைத்தபின்னதில் அவ்வையுச்சரி
அடைத்துமண்டல மேகழித்தெடு - கதித்தவன்
இடத்தினில்பெரு மிடத்தில்வைத்திடு
ஜடத்தயின்னமோர் பொருளைக்கூறுவேன்
வடைத்தபூமி னுதமெடுத்திடு - வங்கேசன்
தடைத்ததிவ்விட மடைத்தையும்மூடி
திடத்துடனிரு யெழுத்தையுமதி
அடைத்துடனொருவாரமுமானமின் -(அதின்மண்ணை)

மண்ணைகெல்லியே மாரளவேயெடு
விண்ணுமண்ணு மிணைந்தோடுருபமாய் - நிழலாடும்

கண்ணில்கண்டபோ தவ்வெழுத்தே நினை
பண்ணுஞ்சாஸரபோல் பாயுஞ்சலமிது
யெண்ணியெட்டுடன் அஷ்டதிக்குபந்தனமு-மினிசெய்
பண்டுநூல்தனில் சொன்னவைப்பிது [வாய்
எண்ணியெண்ணிவெகு பேர்கள்காணிடா
மண்ணிமண்ணில்மடிந்தவர்கோடியே - (யதுமாய்கை)8

கோடியான கல்லுதேடிப்பாரு வினை
யாடலாமதில் வீடெலாங்கனகம் - இதையீசன்
வாடிடாமலிதை ஆதியில்வரத் தேடிவைத்தபொருள்
வாதியென்றசித்தன் - தேடிடாமலொருநாளிலே
இதைசெய்வானே
ஓடும்போதிலிது காரசாரவுப்பை
போடுபோடு புளியதாகிடும் - (புகலாதே. 9

புகலிடாமலிதை குப்பியிலேயடை
ஜெகமறிந்திடா மண்டலஞ்சமாதி - கழிந்தேடு
யிகபரம்புகழ் மவுனமந்திரமகமகிழ்ந்திட
வெட்டுநூறது - துகையுரைத்துமே
கல்வத்தனில்மிசை - இடுநீயே
வகையுவட்டு பதமாகவழித்தெடு
துகையதாகரவி காய்ந்தபின்பு
ஒப்படதாகயேழுமண்கள்செய்துமே-(புடம்போடு.) 10

போட்டபின்னதை வாட்டியேயெடு
காட்டுவாய்பரிபந்துக்கேயிது - (கடுகொன்றாய்)
மூட்டுமூட்டுவிது உலகமுடியளவும்
ஆட்டுஆட்டுமுப்புநாட்டது காட்டாதே.
வுன்சிரமும்பொடிபடும் - (உரையாதே)
ஏட்டைக்கொண்படித் தெண்ணிறுலென
பாட்டுமேபயனானது சொல்லுமே
கேட்டுக்கொண்டபடி செய்யும்சிங்கமே
பதினொன்றுமுற்றே. 11

திருவள்ளுவ நாயனார் அருளிச்செய்த
பஞ்சரத்தினத் திருப்புகழ் முற்றிற்று.

சக்கரவர்த்தி பிரஸ், நெ, 189 தங்கசாலை வீதி, சென்னை,

புத்தக விளம்பரம்

	ரூ.	அ.
கம்பராமாயண பாலகாண்டம் பாட்டு உரை	3	8
பட்டினத்தார்பாடல் உரை	1	8
தாயுமான சுவாமி பாட்டு உரை	3	4
விநயக புராண வசனம் கிளேஸ் காலிகோ பைண்டு	4	0
தனிப்பாடற்றிரட்டு பாட்டு உரை	2	0
வேதாரணிய ஸ்தலப்புராண வசனம்	0	8
அறப்பளீசுரசதகம் உரை.	0	12
குமரேச சதகம் உரை	0	12
மகமாயி அம்மன் பூசாரிப் பாடல	0	4
பாஸ்கரதாஸ் கீர்த்தனை	0	5
மலையாள மாந்திரீக ஹரிச்சுவடி	0	4
கதை புத்தகங்கள்		
அற்புத பூலோகரம்பை கதை படத்துடன்	1	0
32 பதுமை கதை	0	8
ஸ்திரீ புருஷ ரகசியம்	1	0
ஆயிரத்தொருநாளில் சொல்லிய பாரிசுக்கதைகள்	2	0
நாகபூஷணம் தமிழ் நாவல்	0	12
டிராமா புத்தகங்கள்		
கோவிலன் சரித்திரம்	0	4
சாவித்திரி சரித்திரம்	0	4
நல்லதங்காள் சரித்திரம்	0	4
பளளக்கொடி சரித்திரம்	0	4
அல்லி சரித்திரம்	0	4
வள்ளியம்மை திருமணம்	0	4
வைத்திய புத்தகங்கள்		
புலஸ்திய மகாரிஷி வாத சூத்திரம்-300	0	12
உரோமரிஷி சூத்திரம் 100	0	4
ஆயுள்வேத சுருக்கம்	0	12

	ரூ.	அ.
அகஸ்திய முனிவர் பூரண சூத்திரம் 216-பாடல்	0	8
தேரையர் வைத்தியம் 100 பாடல்	0	4
பாலவாகடத்திரட்டு வைத்தியம் 1200	1	0
ஊர்வசி வயித்திய சிட்கா	0	8
இரண்டாம் பாகம்	0	8
வைத்திய குரள் பழமொழி விளக்கம்-108	0	8
திருவள்ளுவ நாயனர் சூஸ்திரம்-16 ஒளவையார் இயற்றிய பஞ்சரத்தினத் திருப்புகழ்-11 சேர்ந்தது	0	2
புலஸ்தியர் விளக்கிய ஞானகற்பம்	0	8
திருவள்ளுவ நாயனர் பரிமுப்பு சூத்திரம்-30	0	2
சோதிட புத்தகங்கள்.		
நவக்கிரக சிந்தாமணி என்னும் சாதக சூடாமணி மூலமும்-உரையும்	0	12
வீமகவி பாட்டு உரை	1	0
சுகர்நாடி சோதிடம்	1	0
சோதிமாமுனிவர் சோதிட கேரளம்	0	12
சாதகலங்காரம் மூலமும் விரிவுரையுடன்	2	0
கணித முருகசேகரம்	1	0
ஹோராசாஸ்திரம்	1	0
கௌசிகசிந்தாமணி 1-பாகம்	1	0
மேற்படி 2-பாகம்	1	0
மேற்படி 3-பாகம்	1	0
சோதிட நூலாதாரம்	0	4
சர்வ கனவின்பலன்	0	4
களவுகாணும் சாஸ்திரம்	0	4
மணிமந்திர வைத்திய சேகரம்	1	0

ஆர்மோனிய ஆசான் சங்கீத களஞ்சியம் 0 2 0

இட்டா - பார்த்தசாரதி நாயுடு சன்ஸ்,

நெ. 189, தங்கசாலை தெரு, மதராஸ்.